# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 27/பேரூ/2024**
**நாள் : 22.11.2024**

திருமதி. M. அமரா
பழனிசெட்டிபட்டி, தேனி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பழனிசெட்டிபட்டி தேர்வு நிலை பேரூராட்சி,
தேனி மாவட்டம். – எதிர் மனுதாரர்

தேனி மாவட்டம், வீரபாண்டி கிராமம், பழனிசெட்டிபட்டி, வார்டு எண்.11, தெற்கு ஜெகநாதபுரம், 4–ஊமைத்துரை தெரு, பிளாட் எண். 166, சர்வே எண். 125/5 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. M. அமரா, என்பவரின் 20.05.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.05.2024 அன்று பெறப்பட்டு, 27/பேரூ/2024 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தேனி மாவட்டம், வீரபாண்டி கிராமம், பழனிசெட்டிபட்டி, வார்டு எண்.11, தெற்கு ஜெகநாதபுரம், 4–ஊமைத்துரை தெரு, பிளாட் எண். 166, சாவே எண். 125/5 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. M. அமரா, என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

"08.12.2022 அன்று பழனிசெட்டிபட்டி தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகத்தில் என்னுடைய வீட்டிற்கு சொத்துவரி விதிப்பு செய்து வழங்க வேண்டும் என நேரில் மனு செய்தேன். இதற்கு பழனிசெட்டிபட்டி தேர்வு நிலை பேரூராட்சி நிர்வாகத்தினர் எனக்கு எந்தவிதமான பதிலும் வழங்கவில்லை. இதனால் 09.01.2023 அன்று செயல் அலுவலர் பழனிசெட்டிபட்டி தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகம், தேனி அவர்களுக்கு பதிவு தபால் மூலம் சொத்துவரி விதிப்பு செய்ய வேண்டும் என மனு செய்தேன். இதற்கு எந்தவிதமான பதிலும் வழங்கப்படவில்லை. இதனால் 23.01.2023 மற்றும் 30.01.2023 அன்று தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் என்னுடைய வீட்டிற்கு சொத்துவரி விதிப்பு செய்து வழங்க வேண்டும் என நேரில் மனு செய்தேன். இதற்கு பழனிசெட்டிபட்டி தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரால் தற்போது பழனிசெட்டிபட்டி தேர்வு நிலை பேரூராட்சி நிலஅளவை எண்.125/5 மற்றும் 125/17 அரசால் வழங்கப்பட்ட பட்டாக்கள் அனைத்தும் ரத்து செய்து ஆணையிடப்பட்டுள்ளது

என்ற பதில் வழங்கப்பட்டது. ஆனால் வட்டாட்சியர், தேனி வட்டம் மற்றும் தேனி மாவட்டத்தில் உள்ள வருவாய் துறையிடமிருந்து என்னுடைய வீட்டுமனை பட்டா இரத்து செய்யப்பட்டுள்ளது என்று கடிதம் மூலம் எந்த விதமான ஆணையும் இந்நாள் வரை எனக்கு வழங்கப்படவில்லை.

நான் வீட்டுமனை பட்டா பெற்று வீடுகட்டி குடியிருந்து வரும் தேனி மாவட்டம் , வீரபாண்டி கிராமம் சர்வே எண்.125/5, பிளாட் நம்பர் – 166 –ல் மின் இணைப்பு எண்.200055030223213 நாள் 25.02.2023 ல் உள்ள வீட்டிற்கு மின் இணைப்பு வழங்கக் கூடாது என்று பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து தமிழ்நாடு மின்சார வாரியம் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக உதவி பொறியாளருக்கு கடிதம் அனுப்பி உள்ளார். நான் வருவாய்த்துறை கட்டுப்பாட்டில் உள்ள நிலத்தில் வீடுகட்டி உள்ளேன். என்னுடைய வீட்டிற்கு மின் இணைப்பு வழங்கக் கூடாது என்று பழனிசெட்டிபட்டி தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் வழங்கிய கடிதத்தை இரத்து செய்திட கேட்டுக்கொள்கிறேன். மேலும் பழனிசெட்டிபட்டி தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரை நேரில் அழைத்து உரிய விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 22.07.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பழனிசெட்டிபட்டி தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரை கோரப்பட்டது.

3) பழனிசெட்டிபட்டி தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 15.10.2024 நாளிட்ட கடித குறிப்பில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார் :-

“தேனி மாவட்டம் பழனிசெட்டிபட்டி பேரூராட்சி வார்டு 11 ஊமைத்துரை தெரு, சர்வே எண்.125/5, என்ற முகவரியில் உள்ள வீட்டிற்கு சொத்துவரி நிர்ணயம் செய்து தரக்கோரி திருமதி. M. அமரா, க/பெ. முருகன் என்பவரால் மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மேற்காணும் சர்வே எண் கொண்ட இடத்தினை கள ஆய்வு செய்யப்பட்டதன்படியும், நில உரிமம் தொடர்பான ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன்படியும் மனுதாரர் கோரியுள்ள வீட்டிற்கு ஏற்கெனவே சென்னையகவுண்டர் என்பவர் பெயரில் நிர்ணயம் செய்யப்பட்டு சொத்துவரி விதிப்பு எண்.3262 குடிநீர் குழாய் இணைப்பு எண்.1122 இருந்து வருகிறது. இந்த வீட்டில் தற்போது மனுதாரர் திருமதி எம். அமரா வசித்து வருகிறார்.

புதியதாக சொத்துவரி நிர்ணயம் செய்வதற்கு அவ்விடத்தில் வசித்து வரும் திருமதி. M. அமரா என்பவரால் புதிதாக வீடு எதுவும் கட்டப்படவில்லை.

மனுதாரர் ஆதாரமாக இலவச பட்டா நகல் மட்டுமே இணைத்துள்ளார். இவரது பெயரில் நில உரிமம் தொடர்பான உரிய ஆவணங்களுடன் (சார்பதிவாளர் அலுவலக ஆவணம், பட்டா, வரைபடம் மெய்த்தன்மை சான்று மற்றும் வில்லங்கச் சான்று ஆகியவைகளை https://onlineeppa.tn.gov.in என்ற இணையதளத்தில் கட்டட வரைபட அனுமதிக்கு விண்ணப்பம் செய்து அனுமதி பெற்று கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, முறையாக சொத்துவரிக்கு விண்ணப்பம் செய்யும் நேர்வில் சொத்துவரி நிர்ணயம் செய்வது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் சமர்ப்பிக்கப்படுகிறது. இது தொடர்பாக பழனிசெட்டிபட்டி தேர்வு நிலை பேரூராட்சியின் 30.08.2024 மற்றும் 07.10.2024 நாளிட்ட கடிதங்கள் மூலம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேலும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பட்டாவில் உள்ள சர்வே எண்.125/5 ஆனது https://onlineeppa.tn.gov.in என்ற இணையதளத்தில் அரசு நிலம் என்று உள்ளதற்கான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே பழனிசெட்டிபட்டி பேரூராட்சி, வீரபாண்டி கிராமம் சர்வே எண்.125/5 மற்றும் 125/17இல் நில அளவை குறித்த தற்போதைய நிலையினை தெரிவிக்குமாறு வட்டாட்சியரிடம் கோரப்பட்டு, தொடர் நடவடிக்கையில் உள்ளது என்ற விவரம் சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும் மனுதாரர் உரிய ஆவணங்களுடன் இணையதளத்தில் கட்டட வரைபட அனுமதிக்கு விண்ணப்பம் செய்து, அனுமதி பெற்று, கட்டடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் முறையாக சொத்துவரிக்கு விண்ணப்பம் செய்யும் நேர்வில் மனுதாரருக்கு சொந்தமான கட்டடத்திற்கு சொத்துவரி நிர்ணயம் செய்வதற்கு பழனிசெட்டிபட்டி தேர்வு நிலை பேரூராட்சிக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்ற விவரம் சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவிக்கப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரரும் மற்றும் பழனிசெட்டிபட்டி தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரும் 24.10.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.09.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திருமதி. M. அமரா என்பவரின் சார்பில் அவரது மகன் திரு. மு. செந்தூரபாண்டியன் என்பவர் 24.10.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :-

"தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி தேர்வு நிலை பேரூராட்சிக்குட்பட்ட வருவாய்த்துறையால் வழங்கப்பட்ட வீட்டு மனை பட்டா பெற்ற வீரபாண்டி கிராமம் சர்வே எண்.125/5, பிளாட் நம்பர் 166–ல் வீடுகட்டி குடியிருந்து வரும் நிலையில், அவ்வீட்டிற்கு சொத்துவரியினை எனது தாயார் திருமதி. M. அமரா என்ற பெயரில் விதிக்க கோரி பேரூராட்சியில் மனு செய்யப்பட்டதில் இந்நாள்வரை சொத்துவரி நிர்ணயம் செய்யப்படவில்லை

மேற்காணும் வீட்டிற்கு வருவாய்த் துறையினரால் வழங்கப்பட்ட பட்டா அரசால் இரத்து செய்யப்பட்டுள்ளது என பேரூராட்சியால் தெரிவிக்கப்பட்டது. ஆனால் வருவாய்த் துறை மூலம் பட்டா இரத்து குறித்து மனுதாரராகிய திருமதி M. அமரா என்பவருக்கு எவ்வித தகவலும் தெரிவிக்கவில்லை.

மேலும், என்னுடைய பட்டா இரத்து செய்யப்பட்டதால் மேற்படி வீட்டிற்கு மின் இணைப்பு வழங்கக் கூடாது என பேரூராட்சி மூலம் மின்சார வாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே, எனது தாயார் திருமதி M. அமரா என்பவரின் பெயரில் மேற்படி வீட்டிற்கு சொத்து வரி விதிப்பதற்கும் மற்றும் புதிய மின் இணைப்பு வழங்கிடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தினை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" – என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரரான பழனிசெட்டிபட்டி தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி ஜெ. ஜெசி ரோஸ்லின் அன்புராணி என்பவர் 24.10.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-

" பழனிசெட்டிபட்டி தேர்வு நிலை பேரூராட்சிக்கு உட்பட்ட சர்வே எண்.125/5 என்ற முகவரி உள்ள வீட்டிற்கு மனுதாரர் திருமதி. M. அமரா , என்பவரின் மாமனாரான சென்னைய கவுண்டர் என்பவரின் பேரில் சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ளது. மேலும் அவ்வீட்டிற்கு குடிநீர் இணைப்பும் மற்றும் மின் இணைப்பும் தற்போது நடப்பில் உள்ளது.

இந்நிலையில் திருமதி M. அமரா என்பவர், தனக்கு வழங்கப்பட்ட இலவச பட்டாவினை ஆதாரமாகக் கொண்டு மேற்படி வீட்டிற்கு தனது பெயரில் சொத்து வரியினை விதிக்குமாறு கோரியுள்ளார்.

சர்வே எண். 125/5 பட்டாவினை நில அளவைத் துறையினால் இரத்து செய்யப்பட்டுள்ளது என வாய்மொழிமூலம் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இணையதளத்தில் விவரங்கள் சரிபார்க்கப்பட்டதில் அரசு நிலமென வகைப்படுத்தப்பட்டுள்ளது என தெரிய வந்தது. இதற்கிடையில், புல எண். 125/5 இடத்தில் நில அளவை குறித்த தற்போதைய நிலையினை தெரிவிக்கக் கோரி நில அளவை துறைக்கு 30.09.2024 மற்றும் 07.10.2024 நாளிட்ட கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

மனுதாரர் தனது வீட்டின் பட்டா மட்டும் சமர்ப்பித்துள்ளார், நில உரிமம் தொடர்பான ஆவணங்களான பட்டா, பத்திரப்பதிவு ஆவணம், வில்லங்கச் சான்று மற்றும் வாரிசு சான்றுடன் சமர்ப்பிக்கப்படும்பட்சத்தில் மனுதாரருக்கு சொந்தமான கட்டடம் எனில், சொத்துவரியினை பெயர் மாற்றம் செய்வது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன்தெரிவித்துக் கொள்கிறேன்" - என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், பழனிசெட்டிபட்டி தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திருமதி M. அமரா என்பவர், தனது 20.05.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில், தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட வீரபாண்டி கிராம சர்வே எண்.125/5, பிளாட் எண்.166–ல் உள்ள தனது வீட்டிற்கு தனது பெயரில் சொத்துவரி நிர்ணயம் செய்யக் கோரியுள்ளார்.

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள இடத்தினை பழனிசெட்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரால் கள ஆய்வு செய்யப்பட்டதில், மனுதாரர் கோரியுள்ள வீட்டிற்கு ஏற்கனவே அவரது மாமனாரான திரு. சென்னையகவுண்டர் என்பவரின் பெயரில் சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டும் (சொத்துவரி விதிப்பு எண்.3262), குடிநீர் குழாய் இணைப்பும் (இணைப்பு எண்.1122) மற்றும் மின் இணைப்பும் பெறப்பட்டு தற்போது வரை நடப்பில் உள்ளதாக செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

இதற்கிடையில், வீட்டு மனை கட்டிக் கொள்ள மனுதாரர் திருமதி M. அமரா என்பவரின் விண்ணப்பத்தின் அடிப்படையில் தேனி மாவட்டம், வீரபாண்டி கிராம சர்வே எண்.125/5, பிளாட் நம்பர் 166 ல் வீட்டினை கட்டிக் கொள்ள இலவச பட்டா வழங்கப்பட்டது. இப்பட்டாவினை அடிப்படையாகக் கொண்டு மனுதாரர் தனது பெயரில் சொத்துவரி நிர்ணயம் செய்யுமாறு பழனிசெட்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சியில் கோரியுள்ளார்.

மனுதாரரின் கோரிக்கை தொடர்பாக, மனுதாரரின் இலவச பட்டாவின் நில உரிமையை குறித்து சரிப்பார்க்கப்பட்டதில் திருமதி M. அமரா என்பவர் சமர்ப்பித்த பட்டாவின் (பட்டா சர்வே எண்.125/5) நில உரிமையானது அரசு நிலம் என்கிற வகைப்பாட்டில் உள்ளது என வருவாய்த்துறையின் இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது என பேரூராட்சி செயல் அலுவலர் ஆவணத்துடன் சமர்ப்பித்துள்ளார். மேலும், வீரபாண்டி கிராம சர்வே எண்.125/5 மற்றும் 125/17–ல் உள்ள பட்டாக்கள் அனைத்தும் நிலஅளவைத் துறையால் இரத்து செய்யப்பட்டு, மீள நிலஅளவை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும், மேற்படி இடத்தின் நில அளவை குறித்த தற்போதைய நிலையினை குறித்து தேனி வட்டாட்சியரிடம் கோரப்பட்டு, அறிக்கை எதிர்பார்க்கப்படுவதாகவும் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பழனிசெட்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட வீரபாண்டி கிராமம் சர்வே எண்.125/5 மற்றும் 125/17 ஆகியவற்றின் தற்போதைய பட்டா நிலை குறித்து தேனி வட்டாட்சியரிடம் காலதாமதமின்றி அறிக்கைப் பெற்று, அவ்வறிக்கையின் அடிப்படையில் மனுதாரரின் கோரிக்கை குறித்து உரிய விதிகளின் கீழ், நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, பழனிசெட்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 22 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. M. அமரா ,
   சர்வே எண். 125/5, பிளாட் எண். 166,
   4–ஊமைத்துரை தெரு, தெற்கு ஜெகநாதபுரம்,
   வார்டு எண்.11, பழனிசெட்டிபட்டி, வீரபாண்டி கிராமம்,
   தேனி மாவட்டம்.

2. செயல் அலுவலர்,
   பழனிசெட்டிபட்டி தேர்வு நிலை பேரூராட்சி,
   தேனி மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர்.சி நகர், சென்னை – 28

4. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
   (பெயரிடப்பட்ட உரையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
   சென்னை – 28

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/~~உதிரிகள்~~.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

22/11/24

சட்ட ஆலோசகர் / செயலாளர் (முகூபொ)

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032